Chapter XXIII code Criminal Procedure)

# IN THE COURT OF: JUDICIAL MAGISTRATE No.I COURT, NAGAPATTINAM

Calendar

Miscellaneous

Preliminary Register CC 588/2021

DCB காவல்நிலையம்
நாகப்பட்டினம்

Sessions

Deposition of witness for: (PW 6 -LW 11)

| | | | |
|---|---|---|---|
| Name : | ஜெயபாலன் | Village /Taluk : | நாகூர் |
| Fathers Name | சிங்காரவேல் | Caste /Religion : | இந்து |
| or Husband Name: | | Age /Calling : | 39 |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 29.05.2024

**(1 வது எதிரி ஆஜர் . 2 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி சார்பில் கு.விமு.ச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனுவானது அனுமதிக்கப்பட்டது. 3 ஆம் எதிரி நேரில் நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதிலிருந்து மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டினம் நாகூரில் குடியிருந்து, பலகார கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரியை எனக்கு தெரியும். 2, 3 எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 2014 ஆம் ஆண்டு நான் நாகப்பட்டினம் 4 கால் மண்டபத்தில் உள்ள புரோமோட் நிறுவனத்தில் ரூபாய் 50,000/- தொகை வைப்பீடு செய்தேன். தொகையை பெற்று கொண்டு, அங்கு வேலை பார்த்த ஊழியர் எனக்கு bond கொடுத்தார். மேற்படி நிறுவனத்தின் மேலாளர் ஆஜர் 1 வது எதிரி தான். அந்த நிறுவனத்தின் பணியாளர் மற்றும் ஆஜர் 1 வது எதிரி என்னை ரூ 50,000/- ஐ இரண்டு ஆண்டுகள் வைப்பீடு செய்தால் , அதற்கு 12 சதவீதம் வட்டி தருவதாக கூறினார்கள். மேற்படி இரண்டு வருடம் முடிந்த பிறகு, நான் என் தொகையை திரும்ப கேட்க, மேற்படி நிறுவனத்திற்கு சென்றேன். அங்கு என் சித்தப்பா மகள் சுதா வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது, சுதாவும் மேலும் அங்கு வேலை செய்து கொண்டிருந்த மற்றொரு ஊழியரும் தற்போது கம்பெனி இங்கு நடைபெற வில்லை என்றும், கோயம்புத்தூரில் நடைபெறுவதாகவும், அங்கு கேட்டு பணத்தை பெற்று தருவதாகவும் கூறினார்கள்.

29/5/24

ஆஜர் 1வது எதிரி பொய்யூரில் குடியிருக்கும் வீட்டிற்கு பணம் கேட்ட 3 முறை சென்றேன். ஆனால் அவர் அங்கு இல்லை. அவரது பெற்றோர் அவர் கோயம்புத்தூரில் இருப்பதாகவும், வெளியூரில் இருப்பதாகவும் கூறினார்கள். என்னுடன் மேற்படி பணத்தை இழந்த 2, 3 நபர்கள் எனது பெயர் மற்றும் முகவரியை வாங்கி கொண்டு மேல் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எனக்கு மேற்படி நிறுவனத்தால் கொடுக்கபட்ட bond பத்திரத்தை தற்போது எடுத்து கொண்டு வந்துள்ளேன். அதை தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அதில் 13.01.2016 ஆம் தேதி என்னிடமிருந்து ரூ 50,000/- பெற்று கொண்டதாக கண்டுள்ளது.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த தேதியில் டெப்பாசிட் செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரி. பட்டியல் சாட்சி 4 - ஜெயசுதா எனது சித்தப்பா மகள். அவர் மேற்படி நிறுவனத்தில் வேலை செய்தார். அந்த வகையில் மேற்படி நிறுவனம் எனக்கு அறிமுகம் ஆனது. மேற்படி நிறுவனத்தில் 12 சதவீதம் வட்டி தருவதால், அதில் பணத்தை வைப்பீடு செய்யுமாறு ஜெயசுதா என்னிடம் சொன்னதன் பேரில்தான் நான் பணத்தை முதலீடு செய்தேன் என்றால் சரிதான். நான் மேற்படி நிறுவனத்திற்கு சென்று பணத்தை ஜெயசுதாவிடம் வழங்கினேன். அவர் தான் எனக்கு மேற்படி bond பத்திரத்தை வழங்கினார். மேற்படி நிறுவனத்தில் ஜெயசுதா 2015 ஆம் ஆண்டிற்கு பிறகு ஜெயசுதா வேலைக்கு செல்லவில்லை. மேற்படி நிறுவனத்தில் ஜெயசுதா போன்றே 7, 8 நபர்கள் பணியாற்றி வந்தார்கள்.

மேற்படி நிறுவனத்தில் வைப்பீடு செய்த ரூ50,000/- இன் அடிப்படையில் அதே நிறுவனத்திடமிருந்து ரூ30,000/- கடன் பெற்றேன். அந்த கடனை நான் திருப்பி செலுத்தினேன். ஆனால் அதன் ரசீது என்னிடம் இல்லை. நான் மேற்படி நிறுவனத்தில் எந்த தொகையும் வைப்பீடு செய்யவில்லை என்றும், நான் வாங்கிய ரூ30,000/- கடன் தொகையை மேற்படி நிறுவனம் கேட்டதால் மேற்படி நிறுவனம் மூடப்பட்ட பிறகு எனது தங்கை ஜெயசுதா உதவியுடன் பணம் வைப்பீடு செய்ததாக ஒரு bond பத்திரம் போலியாக ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்றாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஜெயசுதாவை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, என்னின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

நீதித்துறை நடுவர்